**துணுக்காய் பிரதேசசபை**
**முல்லைத்தீவு மாவட்டம்**

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 01 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து துணுக்காய் பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் அவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 08 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 04 ஆண்டுகட்கு மேலாக நிதிக்கூற்றுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 1,917,672 பெறுமதியான சபைக்குரியதான 04 ஆதனங்களின் நியாயமான பெறுமதியினை அவற்றுக்குரிய ஆதன உறுதிப்பத்திரங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் என்பன கடந்த 05 ஆண்டுகட்கு மேலாக

கிடைக்கப்பெற்றிராமையால் கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 4,502,008 பெறுமதியான மூலதன வேலைத்திட்டங்கள் மூலதனமாக்கப்பட்டிராமையால் மீளாய்வாண்டில் ஆதனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுககளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நேர்முன்னைய வருடத்தில் திரண்டு வந்த பெறுமானத்தேய்வாக ரூபா 2,888,584 அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டுக்கான நிலையான சொத்துக்களின் மீதான பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்குரிய மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

---

இளைப்பாறிய அலுவலரொருவரிடமிருந்த அறவிடப்பட்டிருக்க வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 35,607 தொடர்பில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

---

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) | அத்தியாயம் II விதி 66 | சபையின் வருமான நிலுவைகள் ரூபா 3,196,798 இனை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ii) | அத்தியாயம் III விதி 33 | சோலைவரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | அத்தியாயம் III விதி 59, 60 | வியாபார வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | அத்தியாயம் IV விதி 108 | துணுக்காயில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (v) | அத்தியாயம் V விதி 140 | தீர்ப்பனவு செய்யப்பட்டிராத முற்பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 597,570 தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | அத்தியாயம் IX விதி 180 | காசு களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி .

(i) இலக்கம் 571 — இரு வருடத்திற்கு மேற்பட்ட 23 காலம் கடந்த வைப்புக்கள் ரூபா 499,074 தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி கைநூல்

(i) பிரிவு 5.4.12 — பெறுமதிசேர் வரி (VAT) சபையினால் செலுத்தப்பட்ட பின்னர் அதன் விபரங்கள் அடுத்த மாதம் 15ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கும் அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2016 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 12,465,289 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 11,428,845 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,036,444 ஆல் அதிகரித்திருந்தமையைக் காட்டுகிறது. மூலதன சொத்துக்களுக்கான பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் செலவினத்தில் ஏற்பட்ட நலிவு இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 நிதிசார் பகுப்பு ரீதியான விளைவுகள்

---------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 9,367,364 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 11,106,817 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 1,739,453 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3. தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

----------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா. 44,038,308 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா. 34,615,160 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா. 9,423,148 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.4 வருமான முகாமைத்துவம்

### 2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையினால் சமர்பிக்கப்பட்டிருந்தவாறு மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம், கிடைக்கப்பெற்ற உண்மையான வருமானம் மற்றும் நிலுவையாகவுள்ள வருமானம் என்பன பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **உண்மையான வருமானம்** | **31 திசெம்பர் 2016 இலிருந்தவாறான திரண்டு வந்த நிலுவை வருமானம்** |
|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரிகளும் வரிகளும் | - | - | - |
| வாடகைகளும் குத்தகைக் கட்டணங்களும் | 11,568 | 7,097 | 207 |
| உரிமக் கட்டணங்கள் | 210 | 531 | - |
| ஏனைய வருமானங்கள் | 9,149 | 7,203 | 2,990 |
| | **20,927** | 14**,831** | **3,197** |

### 2.4.2 தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்

17.04.2009 திகதியிடப்பட்ட 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த தொலைத்தொடர்பு கோபுரமொன்றுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள், மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 152000 இனை மீளாய்வாண்டில் உரியவாறு அறவீடு செய்ய சபையால் நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) உள்@ராட்சி உதவி ஆணையாளரால் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த 09 வாகனங்களினை சபைக்குரியதாக உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்க நாளது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய 13 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காமையினால் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படைந்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

**3.2 சொத்து முகாமைத்துவம்**

-------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி ஒழுங்கு விதி இல 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையினது அறிக்கையும் நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் நாளதுவரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) சபைக்குரித்தான 266 எண்ணிக்கையான நூலகப் புத்தகங்களின் சோர்வு தொடர்பில் கடந்த 01 வருடத்துக்கு மேலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) உலக உணவுத்திட்ட அமைப்பினால் (WFP) அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த 132 இருப்புப் பொருட்கள் கடந்த 07 வருடங்களுக்கு மேலாகப் பயன்படுத்தப்பட்டிராது களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதியினையும் கணக்காய்வில் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஈ) கூட்டுமொத்தம் ரூபா 31.28 மில்லியனானது குறித்த நோக்கங்கட்குப் பயன்படுத்தப்பட்டிராது வங்கியொன்றின் நிலையான வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

**3.3 கைவிடப்பட்ட மூலதன வேலைத்திட்டங்கள்**

--------------------------------------------------------

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட ரூபா. 10,200,000 பெறுமதியான 06 மூலதன வேலைத்திட்டங்கள் கணக்காய்வுப் பரிசீலனையின்போது கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது இதற்குரிய காரணங்களும் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை.

**3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்.**

---------------------------------------

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைவையும் சபையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கப்படவில்லை

**4. கணக்களிபொறுப்பும் நல்லாட்சியும்**

-----------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

------------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 55,037 தொடக்கம் ரூபா 5,248,870 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

## 4.2 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன 2006 ம் ஆண்டு பெறுகை வழிகாட்டி கைநூலின் பிரிவு 4.2 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 09.06.2009ம் திகதிய கணக்காய்வு முகாமைத்துச் சுற்றுநிருப இல DMA/2009 (1) இன் பிரகாரம் சபையின் செற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டில் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய கூட்டமொன்று மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் விடயங்கள் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) வருமான சேகரிப்பு
(ii) நிலையான சொத்துக்கள்
(iii) கணக்கீடு
(iv) ஆளணி வெற்றிடம்
(v) வாகனங்களின் பயன்படுத்துகை
(vi) நானாவித வைப்புக்கள்
(vii) பாதீட்டுக் கட்டுப்பாடு
(viii) களஞ்சியங்கள்
(ix) பெறுகை நடைமுறை